# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் மதுரை  PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு  Year: ஆண்டு 2021  FIR No.: மு.த.அ. எண் 15/2021  Date: தாள் 21.10.2021

2. (i) Act சட்டம்:  Sections பிரிவுகள்: u/s 7 of PC Act 1988
   (ii) Act சட்டம்: ஊ.த.க. சட்டம் 1988  Sections பிரிவுகள்: as amended by the PC
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்: (amendment) Act 2018.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை (1) 07.10.2021 at 20.00 hrs
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை (2) 20.10.2021 காலை சுமார் 10.00 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.10.2021  Time : நேரம் 06.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.10.2021  Time : நேரம் 07.30 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 20 கி.மீ மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —  District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் மு. முருகன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்துப்பெருமாள்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 47/2021  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் விவசாயம்  (g) Address : முகவரி கதவு எண்: 2/48, கிழக்கு 2வது தெரு, அம்பட்டையன் பட்டி, திடியன் கிராமம், உசிலம்பட்டி தாலுகா மதுரை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. மகேஸ்வரன் குறுவட்ட அளவர் (பொறுப்பு) சிந்துபட்டி
   உசிலம்பட்டி வட்டம், மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

- தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது -

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. [signature] 21.10.'21 [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21.10.2021 at 08.00 hrs.

Name: பெயர் த. திரிபுசுந்தரி
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண்
ஆ.த.க பிரிவு
மதுரை (21.10.2021)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 21.10.2021-ம் தேதி மாலை சுமார் 06.30 மணிக்கு நான் (T. சூரியகலா காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை) மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியிலிருந்த போது, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா, திடியன் கிராமம், அம்பட்டையன்பட்டிச் சேர்ந்த முத்துப் பெருமாள் மகன் திரு. முருகன் என்பவர் ஆஜராகி எழுத்துப்பூர்வமான புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் மு.முருகன், த/பெ.முத்துப் பெருமாள், கதவு எண். 2/48, கிழக்கு 2வது தெரு, அம்பட்டையன்பட்டி, திடியன் கிராமம், உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. நான் உசிலம்பட்டி தாலுகா, திடியன் கிராமம் உட்கடை அம்பட்டையன்பட்டி கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். நான் விவசாயம் செய்து வருகின்றேன். கடந்த 30.03.2010-ம் தேதியன்று, எனது தந்தை முத்துப்பெருமாள், தாய் முத்துக்கண்ணி ஆகிய இருவருக்கும் சொந்தமான பல இடங்களை என்னுடைய பெயரில் மதுரை சிந்துபட்டி சார்-பதிவாளர் அலுவலக பத்திர எண். 463/2010-ன் படி தான செட்டில்மெண்ட் ஆக பதிவு செய்து கொடுத்தார்கள். அதில் அம்பட்டையம்பட்டி கிராம தற்கால புது நத்தம் UDR சர்வே எண். 391/45 நிர் (மனைவரி பட்டா எண். 736) -ன் படி சுமார் 1125 சதுரடி உள்ள ஓட்டு வீடும் அடங்கும். மேற்கண்ட ஓட்டு வீட்டிற்கு என்னுடைய பெயரில் கடந்த 28.09.2010-ம் தேதியன்று பட்டா பெற்றுள்ளேன். அந்த ஓட்டு வீட்டில்தான் நான் குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். எனது ஓட்டு வீட்டிற்கு தெற்கு பக்கம் உள்ள சர்வே எண். 391/25-ல் உள்ள வீட்டில் எனது சித்தப்பா சோணைத் தேவரின் மகள் மீனாட்சி மற்றும் அவரது கணவர் முத்துகாமன் ஆகிய இருவரும் வசித்து வருகிறார்கள். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு எனது சித்தப்பா வீட்டார்கள் எனக்கு எவ்வித முன்னறிவிப்பு தெரிவிக்காமல் அப்போது இருந்த சர்வேயர் மூலம் இடத்தை அளந்து என்னுடைய இடத்திற்குள் சுமார் 2 அடி தள்ளி கல் ஊன்றி விட்டார்கள். அந்த சமயத்தில் எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தற்போது அவர்கள் மேற்படி வீட்டை விரிவாக்கம் செய்ய, என்னுடைய இடத்திற்குள் வானம் தோண்டி, கான்கிரீட் போட்டு உள்ளார்கள். இது சம்பந்தமாக, நான் குடியிருக்கும் மேற்படி ஓட்டு வீட்டிற்கு அத்துமால் செய்து தர, அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.800/-யை சலான் மூலம் செலுத்தி, அதன் நகலுடன், அத்துமால்

செய்து தர வேண்டி கடந்த 13.09.2021-ம் தேதியன்று உசிலம்பட்டி வட்டாட்சியர் அவர்களுக்கு மனு செய்திருந்தேன். அந்த மனுவிற்கு எந்த ஒரு தகவலும் இல்லாததால், நான் கடந்த 18.09.2021-ம் தேதிய சிந்துபட்டி காவல் நிலையத்தில் மனு கொடுத்தேன். சிந்துபட்டி SI அவர்கள் என்னையும், முத்துகாமன் அவர்களையும் விசாரணை செய்த போது, நான் இடத்தை அளக்க வேண்டுமென்று கூறியதால், அளந்துவிட்டு வர எங்கள் இருவரிடம் கூறினார்கள். பின்னர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்து, 15 நாட்கள் கழித்து, உசிலம்பட்டி வட்டாட்சியர் அலுவலம் சென்று விசாரித்ததில் சிந்துபட்டி சர்வேயர் பெயர் மதிவாணன் என்றும், அவர் செல்லம்பட்டியில் உள்ள உசிலம்பட்டி மெயின்ரோட்டின் வடக்கு பக்கத்திலுள்ள நேத்ராஸ்ரீ என்ற பேன்ஸி ஸ்டோருக்கு மாடியில் உள்ள ஒரு அறையில் தனியாக அலுவலகம் வைத்துள்ளதாகவும், அங்கு சென்று அவரை பார்த்து கொள்ளுமாறும் சொன்னார்கள். அதனால் கடந்த 28.09.2021-ம் தேதியன்று செல்லம்பட்டியில் திரு.மதிவாணன் தனது அலுவலகமாக தனியாக வைத்துள்ள அவரது அறைக்கு ஆவணங்களுடன் சென்று பார்த்தேன். அவர் என்னுடைய ஆவணங்களை பார்த்துவிட்டு, தான் 08.10.2021-ம் அளக்க வருவதாகவும், அதற்கான அறிவிப்பு கடிதத்தை அன்றே (28.09.2021) என்னிடம் கொடுத்து, அளப்பதற்கு முதல் நாள் தன்னை வந்து பார்க்குமாறு கூறினார். நானும் சரியென கூறி வந்து விட்டேன். பின்பு அவர் சொன்னபடி அளப்பதற்கு முதல் நாளான 07.10.2021-ம் தேதியன்று இரவு சுமார் 7 மணியளவில் சர்வேயர் மதிவாணனின் செல்லம்பட்டியிலுள்ள மேற்படி அலுவலகத்திற்கு பார்க்க சென்றேன். அவர் இரவு சுமார் 8 மணிக்கு அந்த அறைக்கு வந்தார். அவரை சந்தித்த போது, திரு. மதிவாணன் மேற்படி இடத்தை அளப்பதற்கு தனக்கு பணம் ரூ.6,000/- கொடுக்கவேண்டும் என்று சொன்னார். அதற்கு நான், இந்த பணம் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணமா எனக் கேட்டேன். அதற்கு சர்வேயர் மதிவாணன் அவர்கள், எனக்கு செலவுக்கு கொடுக்க வேண்டிய பணம் என்று என்னிடம் கூறினார். அவ்வளவு பணம் தற்போது என்னிடம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் பணம் இல்லாவிட்டால் என்னால் நாளைக்கு அளக்க வரமுடியாது. நீங்க பணம் ரெடி பண்ணி வையுங்கள். நான் வரும் 21-ம் தேதியன்று வருகின்றேன் எனக் கூறி, என்னிடம் ஒரு அறிவிப்பு கடிதத்தை மறுநாள் (08.10.2021) தேதியிட்டு கொடுத்தார். அதில் 21.10.2021-ம் தேதியன்று தக்க ஆவணங்களுடன் ஆஜராகுமாறு இருந்தது. பின்பு அவர் என்னிடம், அளப்பதற்கு முதல் நாள் அவரை வந்து பார்க்குமாறு கூறினார். அதன்படி நான் நேற்று (20.10.2021) காலை 10 மணிக்கு சர்வேயர்

மதிவாணனின் தனி அலுவலகத்திற்கு சென்று, அவரிடம் நாளைக்கு அளக்க வருகிறீர்களா எனக் கேட்டேன். அதற்கு அவர் தான் ஏற்கனவே கேட்டிருந்த ரூ.6,000/- ரெடியாக இருக்கா எனக் கேட்டார். அதற்கு நான், விவசாயம் சரியில்லை. கொரானா காரணமாக காசு புரட்ட ரொம்ப கஷ்டமா இருக்கு சார் எனக் கூறினேன். அதற்கு அவர் சரி ரூ.1,000/- குறைச்சுகிட்டு, ரூ.5,000/-த்தை நாளைக்கு (21.10.2021) காலை 10 மணியளவில் செல்லம்பட்டியில் உள்ள அலுவலகத்திற்கு வந்து கொடுங்க, அப்போது உங்க இடத்திற்கு வந்து அளந்து, ரிப்போட் கொடுக்கிறேன். இல்லாவிட்டால் நீங்க அலைஞ்சுகிட்டே இருக்க வேண்டியதான் என்று கூறினார். நானும் சரியென ஒப்புக்கொண்டு அவரிடம், என்னுடைய இடத்திற்கு அருகில் உள்ளவர்கள் அளக்கும் போது பிரச்சனை செய்தாலும், செய்வார்கள் எனக் கூறினேன். அதற்கு அவர் நான் உங்களிடம் போலீஸ் நோட்டீசு தருகின்றேன், நீங்க சிந்துபட்டி போலீஸ் ஸ்டேசனில் கொடுத்து போலீஸ் பாதுகாப்பு வாங்கி கொள்ளுங்கள் என்று போலீஸ் நோட்டீசு கொடுத்தார். நான் அதை வாங்கி கொண்டு சிந்துபட்டி காவல் நிலையத்தில் கொடுத்தேன். என்னுடைய இடத்தை அளந்து ரிப்போர்ட் கொடுப்பதற்கு சர்வேயருக்கு ரூ.5,000/- கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. அதனால் என்னிடம் லஞ்சம் கேட்கும் சிந்துபட்டி சர்வேயர் திரு.மதிவாணன் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். மேலும் சர்வேயர் திரு.மதிவாணன் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,000/-த்தை கொண்டு வந்துள்ளேன். எனது புகார் மனுவுடன் (1) சிந்துபட்டி சார்-பதிவாளர் அலுவலக பத்திர எண். 463/2010-ன் நகல், (2) என்னுடைய பெயரில் உள்ள மனைவரி பட்டா எண். 736-ன் நகல் (3) அத்துமால் அளக்க, அரசுக்கு பணம் செலுத்திய சலான் இணைக்கப்பட்ட, உசிலம்பட்டி வட்டாட்சியர் அவர்களுக்கு அளித்த மனுவின் நகல் (4) நான் சிந்துபட்டி காவல் நிலைய சார்பு-ஆய்வாளர் அவர்களுக்கு 18.09.2021-ம் தேதி கொடுத்த புகார் மனுவின் நகல் (5) சர்வேயர் திரு. மதிவாணன், 08.10.2021-ம் தேதியன்று புலத்தில் ஆஜராக அறிவுறுத்திய அறிவிப்பு கடிதத்தின் நகல் (6) சர்வேயர் திரு. மதிவாணன், 21.10.2021-ம் தேதியன்று புலத்தில் ஆஜராக அறிவுறுத்திய அறிவிப்பு கடிதத்தின் நகல் (7) சர்வேயர் திரு. மதிவாணன், சிந்துபட்டி காவல் ஆய்வாளருக்கு கொடுத்த மனுவின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd/-XXXXX (M.Murugan) 21/10/21. Sir, Received the written complaint on 21.10.2021 at 06.30 hrs, the genuineness of the complainant was verified through sources

and found to be genuine. The Integrity and antecedents of the accused were verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti – Corruption, Chennai and I registered a case in Madurai Vigilance and Anti – Corruption in Cr. No.15/2021 u/s 7 of P.C Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 at 07.30 hrs and took up investigation. Sd/- XXXXX (T.SURIYAKALA), Inspr / V&AC, 21/10/21.

Original FIR, original written complaint of Tr. M. Murugan, S/o.Muthuperumal, along with the documents enclosed by the Complainant is submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of Cases under Prevention of Corruption, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance and Anti – Corruption, Chennai.

(T. Suriyakala)
Inspr of Police,
V& AC, Madurai
21.10.21